சார்பு நீதிமன்றம், பல்லடம்.

MCOP.NO 70/2023

மனுதாரர்  தரப்பு சாட்சி : PW2

பெயர் மற்றும் வயது : அங்கமுத்து

தந்தை பெயர் : கந்தசாமி

தொழில் :

கிராமம் :

தாலுகா : பல்லடம்

மாவட்டம் : திருப்பூர் மாவட்டம்

2026 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 04 ஆம் நாள் புதன்கிழமை திரு.க.யுவராஜ்,பி.ஏ.,பி.எல்., சார்பு மற்றும் உதவி அமர்வு நீதிபதி, பல்லடம் அவர்களின் முன்னிலையில் சாட்சிக்கு இந்நீதிமன்ற இரண்டாம் நிலை பெஞ்ச் கிளார்க் அவர்களால் சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டது

**மனுதாரர் தரப்பில் சாட்சி வரவழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணத்தின் பேரில் முதல் விசாரணை**

எனது தரப்பு முதல் விசாரணையை எழுத்து மூல நிரூபண பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ளது எனது கையெழுத்து தான். நான் சொன்ன விவரங்களை கணினியில் பதிவு செய்து அதனை நான் சரிபார்த்து கையெழுத்து செய்து தாக்கல் செய்துள்ளேன். எனது தரப்பு ஆவணங்களாக

2. சாட்சியின் ஆதார் அடையாள அட்டை ம.சா.ஆ. 17 ஆக குறியீடு செய்யப்படுகிறது

**2 வது எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. நான் யார் சொல்லி சாட்சியம் அளிக்க வந்தேன் என்றால் மனுதாரர் அழைத்தன் பேரில் வந்தேன். இந்த விபத்து எப்போது நடந்தது என்றால் 11/12 2022 ஆம் தேதி நடந்தது. மேற்படி விபத்து எங்கே நடந்தது என்றால் வளையப்பாளையம் ஜே ஜே பிரிவு அருகே நடந்தது. நான் அப்போது எதற்காக சென்றேன் என்றால் ஒரு துக்க நிகழ்விற்காக சென்றேன். நான் எந்த திசையில் சென்றேன் என்றால் தெற்கில் இருந்து வடக்கு நோக்கி சென்றேன். மேற்படி வாகனம் பெட்ரோல் இல்லாமல் மேற்கில் இருந்து கிழக்கு நோக்கி தள்ளிக்கொண்டு சென்ற போது விபத்து நடந்தது. சம்பவ இடத்தில் யார் யார் இருந்தது என்றால் நிறைய பேர் இருந்தனர். இந்த விபத்து தொடர்பாக போலிஸாரிடம் நான் புகார் கொடுத்து என்னை அவர்கள் விசாரணை செய்யவில்லை என்றால் சரிதான்.
2. காயம்பட்டவரை எனக்கு எவ்வாறு தெரியும் என்றால் எனக்கு தெரியாது விபத்து நடந்த போது தான் அவரை நான் நேரில்பார்த்தேன் .நான் விபத்தை நேரில் பார்க்கவில்லை எனவே தான் வாகனத்தை தள்ளிக்கொண்டு சென்றதாக முரண்பட்டு சாட்சியம் அளிக்கிறேன் மனுதாரர் கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய் சாட்சியம்

அளிக்கிறேன் எனவே எனது சாட்சியம் ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல என்றால் சரியல்ல.

சாட்சி கூறிய படி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் நேரடியாக கணினியில் தட்டச்சிடப்பட்டு, சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்து பெறப்பட்டது

(Sd/–)K.Yuvaraj,B.A.,B.L.,
சார்பு நீதிபதி, பல்லடம்.